**தேசிய இளைஞர் படையணி - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் படையணியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய இளைஞர் படையணியின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, படையணி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது படையணியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

படையணியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்த பட்சம் ஒவ்வொரு வருடாந்த அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் தொடர்பாக எதிர்பார்க்கப்படுகின்ற நிபந்தனைகள் மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டால் அவ்வேறுபாடு இ.பொ.து.க.நி.3 - கணக்கீட்டு நியமத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் திருத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 இல் கிரயம் ரூபா 400,719,690 ஆன முற்றாகப் பெறுமானத் தேயிவிடப்பட்டும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் இச்சொத்துக்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் ஒரு சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் குறைந்த பட்சம் ஒவ்வொரு ஆண்டிலும் மாற்றமடையும் முறை கணக்கீட்டு மதிப்பீட்டின் வேறுபாடாக கணக்கிடப்பட வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்கின்றேன். 2019 ஆம் ஆண்டில் திசெம்பர் 31 வரையில் ரூபா 400,719,690 பெறுமதி முற்றாகப் பெறுமானத் தேயிவிடப்பட்டும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், எதிர்காலத்தில் அக்கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் | 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டுக் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| 01 இன் 21(ஊ) பந்தியின் பிரகாரம் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உட்பட குறிப்புக்கள் மற்றும் ஏனைய விரிவான குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியுள்ள போதிலும், படையணியால் வருமானம்,செலவு,அரச மானியப் பெறுவனவுகள்,குறுங்கால முதலீடுகள்,செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய மீதிகள்,ஊழியர் நலன்களுக்கான ஒதுக்கங்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | கொள்கைகள் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கங்கள் ரூபா 22,466,917 ஆன போதிலும் சரியான பணிக்கொடை ஒதுக்கங்கள் ரூபா 25,644,220 ஆக இருந்தமையால் பணிக்கொடை ஒதுக்கங்கள் மீதி ரூபா 3,177,303 குறைவாகவும் மற்றும் பணிக்கொடைச் செலவுகள் ரூபா 3,177,303 குறைவாகவும் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதனால் வருடத்தின் பற்றாக்குறை மேற்படி அளவினால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடை செலவுகள் ரூபா 3,177,303 ஆனது அதிகமாக காட்டப்பட்டிருந்த தவறு 2021 ஆம் ஆண்டின் வருடாந்த கணக்குகளில் திருத்தப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்கள் ரூபா 19,538,108 ஆன ஏனைய பெற வேண்டிய மீதியில் உள்ளடங்கியுள்ள 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான பெற வேண்டிய ரூபா 11,172,664 ஆனது 2021 திசெம்பர் 31 வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இவ்வருடத்திற்கான கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கங்கள் இல்லாமையால் அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக எதிர்வரும் காலங்களில் கலந்துரையாடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய தொகை விரைவில் அறவிடப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) படையணியின் வெளியார் நிறுவனமொன்றான சிறு வியாபார அபிவிருத்தி பிரிவினால் 2015 முதல் 2020 வரை பயன்படுத்தப்பட்ட மின்சாரம் மற்றும் நீர் பயன்பாட்டிற்கான மற்றும் வீதவரிக்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 13,653,116 ஆனது 2021 சனவரி 19 வரையில் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கடந்த வருடத்திற்கான பெறுமதிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக சிறு வியாபாரப் பிரிவிற்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய தொகை விரைவில் அறவிடப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் ரூபா 61,948,023 ஆன ஏனைய செலுத்த வேண்டிய பெறுமதியில் உள்ளடங்கியுள்ள 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் ரூபா 13,262,791 ஆனது 2021 திசெம்பர் 31 வரையில் தீர்க்கப்படாது காணப்பட்டது. | ஏனைய செலுத்த வேண்டிய ரூபா 61,948,023 ஆன பெறுமதி இதுவரை தீர்க்கப்பட்டுள்ளதுடன் மற்றும் தீர்வுச் சிக்கல் உள்ள பெறுமதிகள் தொடர்பான விபரமொன்று விரைவில் சமர்ப்பிக்கப்படும். | செலுத்த வேண்டிய தொகை தாமதமின்றி கொடுத்து தீர்ப்பதற்கும் பொறுப்பொன்று இல்லாமல் செலுத்த வேண்டிய மீதிகள் இருப்பின் அம்மீதிகள் வருமானத்திற்குப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தி | படையணியில் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2015,2016 மற்றும் 2017 ஆம் வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு 2021.11.03 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2018 மற்றும் 2019 வருடாந்த அறிக்கைகளும் தற்போது வரைவு படுத்தப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒருங்கிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 63,528,090 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய வருடத்தின் மிகை ரூபா 56,160,946 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 119,689,036 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 74,029,352 ஆல் குறைவடைந்தமை மற்றும் அபிவிருத்திச் செலவுகள் ரூபா 59,344,076 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 49 பயிற்சி நிலையங்களில் 2019 ஆம் ஆண்டில் முதலாம் குழுவிற்காக நடாத்தப்பட்ட பயிற்சிக் கற்கைநெறிகளுக்கு 6,941 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 4,784 மாணவர் | 2019 ஆம் ஆண்டிலிருந்து கற்கைநெறிகளை விட்டுச் செல்கின்ற எண்ணிக்கையை எதிர்காலத்தில் குறைப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழொன்று வழங்கப்படுதல், தேசிய | மாணவர்களின் செயலாற்றலை அதிகரிக்கும் வகையில் கற்கை நெறிகள் முகாமைப்படுத்தப் பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கற்கைநெறியை பூர்த்தி செய்திருந்தனர். இணைக்கப்பட்ட 2,157 மாணவர்களில் அதாவது 31 சதவீதம் கற்கை நெறியிலிருந்து வெளியேறினர். 56 பயிற்சி நிலையங்களில் 2019 ஆம் ஆண்டில் இரண்டாம் குழுவிற்காக நடாத்தப்பட்ட கற்கைநெறிகளுக்கு 3,882 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் 2,426 மாணவர் கற்கைநெறியை பூர்த்தி செய்திருந்தனர். இணைக்கப்பட்ட 1,456 மாணவர்களில் அதாவது 38 சதவீதம் கற்கை நெறியிலிருந்து வெளியேறினர். பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில் 2019 ஆம் ஆண்டில் பல்வேறு பத்து செயற்திட்டங்களுக்காக பங்குபற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 45,510 என்பதுடன் அதற்காக பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 16,727 ஆக இருந்ததுடன் பங்குபற்றாத மாணவர்களின் எண்ணிக்கை 28,783 ஆகும்.அதன் பிரகாரம் ஒவ்வொரு பயிற்சித் திட்டங்களுக்காகவும் பங்குபற்றாத சதவீதம் நூற்றுக்கு 50 தொடக்கம் 79 வரையான வீச்சில் காணப்பட்டது. | மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய மட்டத்திலான கலைப்போட்டிகள் மூலம் தொழில்முறை வீரர்கள் மற்றும் கலைஞர்களையும் உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதன் மூலம் கற்கைநெறியின் தரத்தை உயர்த்துவதன் மூலம் கற்கை நெறிகளை விட்டுச் செல்கின்ற இளைஞர் / யுவதிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் முதலாம் குழுவிற்காக 49 பயிற்சி நிலையங்கள் காணப்பட்டதுடன் அவற்றின் வகுப்பறை கொள்ளளவு 7825 மாணவர்கள் ஆகும். 16 பயிற்சி நிலையங்களில் வகுப்பறைக் கொள்ளளவை | பயிற்சி நிலையங்களில் காணப்படுகின்ற வசதிகள் மற்றும் நிலையங்களின் அமைவிடங்களின் பிரகாரம் இளைஞர் யுவதிகளுக்கு இடையே அதிகளவான கோரிக்கைகள் சில நிலையங்களுக்கு | - மேற்படி - |

விஞ்சியதாக மாணவர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 33 நிலையங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை கொள்ளளலவை விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் இரண்டாம் குழுவிற்காக 56 பயிற்சி நிலையங்கள் காணப்பட்டதுடன் அவற்றின் வகுப்பறைக் கொள்ளளவான 9105 மாணவர்களுக்காக 3882 மாணவர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அனைத்து நிலையங்களிலும் கொள்ளளவை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. தம்புள்ள ஹோட்டல் பாடசாலையின் வகுப்பறைக் கொள்ளளவு 200 மாணவர்கள் என்பதுடன், 2019 ஆம் ஆண்டில்ருந்து முதலாம் மற்றும் இரண்டாம் குழுக்களுக்காக இணைக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை முறையே 103 மற்றும் 97 மாணவர்களாக இருந்ததுடன் யக்கல வணிக தனியார் நிறுவகத்தின் (IBPO) வகுப்பறைக் கொள்ளளவு 60 மாணவர்கள் என்பதுடன், 2019-I மற்றும் 2019-II குழுக்களுக்காக இணைக்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை முறையே 37 மற்றும் 08 மாணவர்களாக காணப்பட்டதுடன் அதன் காணப்படுகின்றது. அந்நிலையங்களுக்காக பேணப்படுகின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் சில நிலையங்களின் கொள்ளளவை விஞ்சியதாக இணைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் வகுப்பறைக் கொள்ளளவு குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | இளைஞர் படையணியின் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்களில் 2019 திசெம்பர் 31 இல் படையணியால் 56 பிரதேச பயிற்சி நிலையங்கள் நடாத்தப்பட்டு வருவதுடன் அந்நிலையங்களிற்கான காணிகளின் எண்ணிக்கை 58 ஆகும். படையணி ஆரம்பிக்கப்பட்ட போது இலங்கை மகாவலி அதிகாரசபை, இலங்கை முதலீட்டு சபை, காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு, கல்வி அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் உட்பட அரசின் வெற்றுக்காணிகள் மற்றும் கட்டிடங்களுடன் கூடிய காணிகள் பெறப்பட்டு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 18 காணிகளை கையேற்கும் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதுடன் மிகுதி 26 நிலையங்களுக்கான காணிகள் கையேற்கும் நடவடிக்கை இதுவரையில் முடிவடையவில்லை. நுவரெலியா தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு உரிய கட்டிடமொன்று கையேற்கப்படாது அல்லது வாடகை செலுத்தப்படாது திருகோணமலையில் அரச பாடசாலையொன்றும் பயிற்சி நிலையங்களாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இளைஞர் படையணி ஆரம்பிக்கப்பட்ட போது பிரதேச செயலாளர் (அரசு) இலங்கை மகாவலி அதிகாரசபை, இலங்கை முதலீட்டு சபை, காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு, கல்வி அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் போன்ற நிறுவனங்களின் பொறுப்பிலுள்ள வெற்றுக் காணிகள் கட்டிடங்களுடனான காணிகள் பெறப்பட்டு இளைஞர் படையணியில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அக்காணி மற்றும் கட்டிடங்கள் அச்சந்தர்ப்பத்தில் முறையாக கையேற்கப்பட்டிருக்கவில்லை. இதுவரை இக்காணிகள் முறையாக கையேற்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | முறையான விதத்தில் காணிகள் கையேற்கப் படுவதற்கும் மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவம் செயற்திறனாகவும் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் (NEMO) தேசிய உபகரண மற்றும் இயந்திரங்கள் அமைப்பிற்கு இளைஞர் படையணியின் நிர்மாணம் திறந்த டென்டர் நடைமுறைக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. நிர்மாண முன்னேற்றம் தோல்வியடைந்ததால் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இவ்வொப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதற்கு, செய்யப்பட்ட வேலை மற்றும் செலுத்தப்பட்ட தொகைக்கும் இடையிலான வேறுபாடு அறவிடப்படுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும், 50 சதவீதத்திற்கு மேற்பட்ட முன்னேற்றம் காணப்படுகின்ற நிர்மாணப் பணிகளை துணை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குவதற்கும், 50 சதவீதத்திற்கு குறைவான முன்னேற்றமுள்ள நிர்மாணங்களுக்கு மீறு டென்டர் விடுவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2022 மே 30 வரையில் 50 சதவீதத்திற்கு குறைவான முன்னேற்றமுள்ள செயற்திட்டங்கள் மனு டென்டர் விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் NEMO | இந்நிர்மாணங்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட முன்னேற்றமொன்று துணை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குவதற்கான தீர்மானத்தின் பிரகாரம் 05 நிலையங்களில் 06 கட்டிட அலகுகளை நிர்மாணிப்பதற்காக 2020/12/28 அன்று துணை ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. மேலும் 2021 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்களின் எல்லைக்குள் 06 கட்டிட அலகுகள் துணை துணை ஒப்பந்தக்காரர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 50 சதவீதத்திற்கு குறைவான செயற்திட்டங்களில் டென்டர் கோருவதற்குத் தேவையான மேற்கொண்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு கட்டிடத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தேசிய இயந்திர உபகரணங்கள் நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய தொகையைக் கணக்கிடுவதற்குத் தேவையான ஆவணங்களை தேசிய இளைஞர் படையணிக்கு வழங்குமாறும் அந்நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | படையணியின் நோக்கம் மற்றும் செயலாற்றல் என்பவற்றை அதிகரிக்கும் விதத்தில் ஒப்பந்த நிர்வாகம் செயற்திறனாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய தொகை கணக்கிடப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 6,650,000 பெறுமதிக்கு 10 முச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அம்முச்சக்கர வண்டிகளை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிலையங்களின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமான காரணத்தினால் ஏனைய நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இற்றைவரையில் அந் நிலையங்களின் நிர்மாணம் முடிக்கப்படாத காரணத்தினால் அந்நிலையங்கள் ஆரம்பிக்கப்படாததுடன் அம்முச்சக்கர வண்டிகள் 2022 ஆம் ஆண்டில் இதுவரை மாகாண அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில் இந்த அனைத்து நிலையங்களும் தொடங்கும் அடிப்படையிலும் மற்றும் அவ்வாறு தொடங்கப் படுகின்ற அனைத்து நிலையங்களுக்கும் முச்சக்கர வண்டிகளை வழங்குவதற்கான தேவையின் அடிப்படையிலும் அச்செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கங்களைப் பொறுத்து 2017 ஆம் ஆண்டில் திசெம்பர் மாதம் முச்சக்கர வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பின்னர் புதிதாக தொடங்கப்பட்ட நிலையங்கள் முன்னுரிமை அடிப்படையில் அந்தந்த நிலையங்களுக்கு முச்சக்கர வண்டிள் வழங்கப்பட்டன. ஆனால் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமான காரணத்தினால் இவ்வாறு கணக்காய்வு திகதி வரையில் தொடங்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட நிலையங்களுக்கு வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த முச்சக்கர வண்டிகள் அந்நிலையங்கள் அமைந்துள்ள மாகாணத்தின் அருகிலுள்ள நிலையங்களில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்ததை நான் ஏற்றுக்கொள்கின்றேன். | படையணியின் நோக்கங்களை அடைவதற்கு நிர்வாக நடவடிக்கைகள் செயற்திறனாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தலைமை அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 09 வாகனங்களில் 07 வாகனங்களின் உரிமை படையணிக்கு இல்லாமல் இருந்ததுடன் அவ்வாகனங்களை படையணியின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்த மற்றும் அப்புறப்படுத்தப்பட வேண்டிய 03 வாகனங்கள் 2021 சனவரி 19 வரை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை கையேற்றல் மற்றும் சொத்துக்கள் அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் மற்றும் முகாமைத்துவ பதவிகள் முறையே 87 மற்றும் 11 ஆக இருந்தமையால் வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும் படையணியின் பயிற்சி நிலையங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மொழி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி ஆலோசகர்கள் முறையே 57, 59 மற்றும் 58 ஆக இருந்தாலும் நிலையான பதவிகளாகக் காணப்பட்டமை 10, 39 மற்றும் 35 மட்டுமே என்பதுடன் ஒப்பந்த அடிப்படையில் தமிழ்மொழி ஆலோசகர்கள் 15 பேர் மற்றும் ஆங்கில மொழி ஆலோசகர்கள் 04 பேரும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் தமிழ், தகவல் தொழில்நுட்பம் ஆங்கில ஆலோசகர்கள் முறையே 32, 20 மற்றும் 19 ஆன வெற்றிடங்கள் காணப்பட்டன. | ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டாலும் படையணியிலிருந்து பெறப்படும் நியமங்கள் ஓய்வூதியத்திற்கு உரியவை அல்ல என்பதாலும் நாடு பூராகவும் நிலையங்கள் அமைக்கப்படுவதாலும் அரச நிரந்தர ஓய்வூதியம் பெறும் பணிகளுக்காக அவர்கள் விண்ணப்பித்து அதற்காக அனுப்பப்படுகின்றவர்கள் அதிகளவில் காணப்படுவதால் இவ்வெற்றிடங்கள் காணப்படுவதற்கு காரணமாக உள்ளது. | வெற்றிடப் பதவிகள் விரைவில் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு படையணியின் மனிதவள முகாமைத்துவம் செயற்திறனாக மேற்கொள்ளப்பட வேண்டும். |